**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.6/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி D. ஞானசௌந்தரி, அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னராஜி | மதம் | : இந்து |
| த/பெ | : கன்னியப்பன் | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : செருக்கனூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**31.10.2025**
**பி.வா.சா. 2 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

1. வாதி தரப்பில் என்னை குறுக்கு விசாரணை செய்யும்போது என்னுடைய மற்றும் எனது அப்பா, அம்மாவின் ஆதார் அடையாள அட்டையை தாக்கல் செய்ய கோரியிருந்ததால் ஆதார் அடையாள அட்டைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். எனது ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(ஆதார் அடையாள அட்டை பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது அப்பா ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(ஆதார் அடையாள அட்டை பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது அம்மா ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(ஆதார் அடையாள அட்டை பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் போட தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆனால் எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரிந்துதான் நான் அதில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எனது அப்பா கன்னியப்பன் நல்ல ஆரோக்கியத்திலும் நல்ல மனநிலையுடனும் உள்ளார் என்றால் ஆமாம். எனக்கு வாதி சதாசிவம் நன்கு

தெரியும் என்றால் சரிதான். நான் என் மனைவி, என் அப்பா, அம்மா அனைவரும் ஒன்றாகதான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

4. நான் வசித்து வரும் முகவரிக்குதான் என் அப்பா முதியோர் உதவித்தொகை பெற்று வருகிறார் என்றால் ஆமாம். அதே முகவரியில்தான் தற்போது வரை நானும் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 முதல் 6 வரையிலான ஆதார் அட்டைகளும் அதே முகவரிக்குதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எனது ஆதார் அட்டையில் கோவில் தெரு என்றுதான் உள்ளது என்றால் ஆமாம். எனது தாயாரின் ஆதார் அட்டையில் ராமர் கோவில் தெரு என்றுதான் உள்ளது என்றால் ஆமாம். இரண்டும் ஒன்றுதான். என் அப்பா அம்மாவிற்கு முன்பே ஆதார் அட்டை கொடுத்துவிட்டாகள். எனக்கும் என் மனைவிக்கும் பின்னிட்டு ஆதார் அட்டை கொடுத்தார்கள்.

5. என் தந்தையின் ஆதார் அட்டையில் பெருமாள் கோவில் தெரு என்று உள்ளது என்றால் ஆமாம். கோயில் தெரு, பெருமாள் கோயில் தெரு, ராமர் கோயில் தெரு இவை அனைத்தும் ஒரே தெருதான் என்றாலும் வேறு வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆதார் அட்டை வாதி சதாசிவத்தினுடையது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் ஆதார் அட்டை வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான், என் தந்தை, தாயார் அனைவரும் வசிக்கும் கோயில் தெரு, பெருமாள் கோயில் தெரு, ராமர் கோயில் தெரு என்பது பழைய காலனியில் உள்ளது என்றால் சரிதான். அப்பா அம்மா அங்கு உள்ளார்கள். நான் சாப்பாடு கொடுக்க போய் வருவேன்.

6. சதாசிவத்தின் ஆதார் அட்டையில் புதிய காலனி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் முதலில் அவர் பழைய காலனியில் இருந்தார். தற்போது அவர் புதிய காலனியில் வீடு கட்டிவிட்டார். வாதியின் ஆதார் அட்டை பழைய காலனியில் இருந்தபோது கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆதார் அட்டை வாதி சதாசிவத்தின் மனைவியுடையது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் ஆதார் அட்டை வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சதாசிவத்தின் மனைவியின் ஆதார் அட்டையிலும் புதிய காலனி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம். அவர்கள் பழைய காலனியில் இருந்தபோது வாங்கிய அட்டை ஆகும். புது காலனி சென்ற பின்பு புது ஆதார் அட்டை

வாங்கவில்லை.

7. வாதி சதாசிவம் வீடு கட்டி வசித்து வருவதாக சொல்வதில் அவரது வீட்டின் புல எண், நான்கு எல்லைகள், அடியளவுகள் சொல்ல முடியுமா என்றால் அவரது வீடு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் 43 வருடங்களாக வழக்கு சொத்தில் குடியிருப்பதாக சொல்லியிருப்பதற்கு ஆதரவாக நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அங்கு இருந்தோம். ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி வேறு ஒரு இடத்தில் வசித்து வருவதற்கான வரி ரசீதுகளை தாக்கல் செய்திருப்பதாக சொல்லியிருப்பதற்கு ஆதரவாக நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சதாசிவம் என்னை எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றால் சதாசிவம் வீடு எரிந்துவிட்டதால் சில காலம் எங்கள் வீட்டில் குடியிருக்க அனுமதி கொடுத்தோம். ஆனால் அவர் எங்களது வீட்டை அவரது வீடு என கூறி பிரச்சனை செய்தார்.

8. சதாசிவம் எங்கள் வீட்டில் குடியிருந்தேரா எங்கள் இடத்தில் குடியிருந்தாரா என்றால் எங்கள் இடத்தில் குடியிருந்தார். அவர் வீடு எரிந்ததும் வசித்து வந்த வீட்டில் தான் தற்போது வரை வாதி வசித்து வருகிறார் என்றால் சதாசிவம் வீடு எரிந்துவிட்டதால் சில காலம் எங்களது இடத்தில் குடியிருக்க அனுமதி கொடுத்தோம். ஆனால் அவர் மோசடியாக பட்டா பெற்று கொண்டு தனது இடம் என பிரச்சனை செய்து வருகிறார். அதை நாங்கள் கேட்டோம். எனவே அவர் வழக்கு தாக்கல் செய்தார். சதாசிவம் தற்போது வரை அதே வீட்டில்தான் வசித்து வருகிறார் என்றால் வழக்கு நடந்து வருவதால் வழக்கு முடியட்டும் என அவரை காலிசெய்யாமல் விட்டுவிட்டோம். அவர் எங்கள் இடத்தில் உள்ள வீட்டில்தான் உள்ளார். நாங்கள் போய் கேட்டதால் எங்கள் இடத்தில் இருந்த எங்களது கூரை வீட்டை சதாசிவம் பிரித்து போட்டுவிட்டார்.

9. இந்த சம்பவத்திற்கு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் என்மீது அவர் கொடுத்துள்ளார். வழக்கு சொத்து எங்களுக்குரியது என்று இதுநாள்வரை நான் நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து குறித்து எனக்கும் சதாசிவத்திற்கும் தொடர்ந்து பிரச்சனை உள்ளது என்றால் முன்பு இருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு நாங்கள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. காலி செய்ய சொன்னதற்கு சதாசிவம் என்மீது காவல் நிலையத்தில் வழக்கு கொடுத்துள்ளார். என் தரப்பில் மெய்தன்மை ஆவணம் என

பி.வா.சா.ஆ 3 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் 4வது வரியில் **"(26)"** என்பது மட்டும் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே அவ்வாறுதான் கொடுத்தார்கள். பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் கோபுர முத்திரை இல்லை என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் **"எண்.2/133, பெருமாள் கோவில் தெரு, செருக்கனூர் கிராமம் என்ற விலாசத்தை சேர்ந்த திரு.ஜி. கன்னியப்பன்"** என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெருமாள் கோவில் தெரு, செருக்கனூர் கிராமம் என்ற விலாசத்திற்குரிய ஆவணம்தான் என்றால் அந்த விலாசத்தில் இருக்கும்போது கொடுத்த மனு ஆகும். பட்டாவும் அந்த விலாசத்தில் இருக்கும்போதுதான் கொடுத்தார்கள். என்ன ஆவணங்களை கொடுத்து பி.வா.சா.ஆ 3 ஆவணத்தை பெற்றோம் என்பதற்கான விவரம் மற்றும் ஆவணங்கள் பி.வா.சா.ஆ 3 ஆவணத்துடன் இல்லை என்றால் நான் தாலுகா அலுவலகத்தில் கடிதமும் எனது ஆதார் அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்கள் கொடுத்தேன். அதற்காக எனக்கு இந்த ஆவணத்தை கொடுத்தார்கள்.

11. நான் கொடுத்த கடிதத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 3 ஆவணம் மோசடியாக என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதில் 4வது வரியில் **"(26)"** என்பது கையால் எங்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. தாவா சொத்திற்கும் பி.வா.சா.ஆ 3 ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வாதிக்கு பட்டா கொடுத்த தனிவட்டாட்சியர் 2007 முதல் 2015 வரை பணிப்புரியவில்லை என சொல்லியிருப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு வாதிக்கு பட்டா கொடுத்த தனிவட்டாட்சியர் 2007 முதல் 2015 வரை பணிப்புரியவில்லை என சொல்லியிருப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

12. தாவா சொத்தில் தற்போது வரை என் அப்பா அனுபவத்தில் உள்ளாரா என்றால் ஆமாம். என் அப்பாவின் அனுபவத்தை யாரும் இடைஞ்சல் செய்யவில்லை என்றால் அப்படியேதான் உள்ளது. இந்த வழக்கு எப்போது முடியுமோ அப்போது பார்த்து கொள்ளலாம் என விட்டுவிட்டோம். வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்வதில் எனக்கு

பிரச்சனை இல்லை என்றால் வழக்கு என்ன முடிவாகிறதோ அதன்படி பார்த்து கொள்ளலாம். என் அப்பா யாருக்கும் விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். வில்லங்க சான்றில் எந்த பதிவும் இருக்காது என்றால் ஆமாம். தாவா சொத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிற்கும் சம்மந்தமில்லை என்றால் அப்படி சொல்லமுடியாது.

13. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 பட்டா 2008ல் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் 1982ல் என் அப்பாவிற்கு பட்டா கொடுத்தார்கள். 25.03.2008 என பி.வா.சா.ஆ 1 பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. 1982ல் என் அப்பாவிற்கு பட்டா கொடுத்தார்கள். 2008ல் கொடுக்கப்பட்ட பி.வா.சா.ஆ 1 பட்டாவிற்கும் என் அப்பாவிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். 1982ல் என் அப்பாவிற்கு கொடுத்த பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 11.06.2009ல் வாதியின் வீடு எரிந்து விட்டது என்பதற்கான முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தற்போது புதிய காலனியில் வீடு கட்டிய இடத்தில் உள்ள குடிசை இடம் எரிந்ததற்கான ஆவணத்தைதான் தாக்கல் செய்துள்ளார்கள். அப்போது எங்கள் இடத்தில் குடியிருந்ததால் அதில் எங்களது முகவரி போடப்பட்டுள்ளது.

14. தாவா சொத்தில் உள்ள வாதியின் வீடு எரிந்து விட்டது என்பதற்காகதான் அவருக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து இழப்பீடும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அவர் வீடு எரிந்தபோது எங்கள் இடத்தில் குடிசைப் போட்டிருந்ததால் அப்படி குறிப்பிட்டு வாங்கியுள்ளார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தாவா சொத்தில் உள்ள வாதியின் வீடு எரிந்து விட்டது என்றாலும் அவர் வீடு எரிந்தபோது எங்கள் இடத்தில் குடிசைப் போட்டிருந்ததால் அப்படி குறிப்பிட்டு வாங்கியுள்ளார்கள். என் அப்பாவே தாவா இடத்திற்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை என்றும் வாதி கோரியவாரி தீர்ப்பு வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என்றும் கூறியுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

15. பி.வா.சா.ஆ 1 ஆவணத்திற்கும் வாதிக்கும் சம்மந்தமில்லை என்று தான் கூறியுள்ளேன் என்றாலும் வாதி கோரியவாறு தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. வாதிதான் தற்போதுவரை தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)